Deposition of Witnesses
(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court of the Magalir Neethimandram (Mahila Court) Coimbatore

Present: R.Nandhini Devi, M.L., D.P.M

S.C.No. 71/2018

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS NO.16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | NAME | பாப்பாத்தி | 6 | CALLING | |
| 2 | FATHER'S NAME | | 7 | CASTE | |
| 3 | VILLAGE | | 8 | RELIGION | |
| 4 | TALUK | | 9 | AGE | |
| 5 | DISTRICT | | 10 | | |

**Solemnly affirmed in accordance with the Provision of Act for 1873**

**05-03-2021**

**முதல்விசாரணை-**

நான் தற்போது போக்குவரத்துகாவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2018 ஆண்டு நான் போத்தனூர் காவல் நிலையம் பி13 ல், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரிவில் பெண் காவலர் எண் 1193 ஆக பணியில் இருந்தபோது நதியா, 24 வயது பெண் தீ வைத்துகொண்டார் என்றும், அந்த சவம் குளியறையில் உட்கார்ந்த நிலையில் இருந்தது என்றும் எனக்கு தகவல் வந்தது, நானும் முதல் நிலைகாவலர் மருதாசலமும் சேர்ந்து அந்த குளியளறைக்கு சென்றபோது அங்கு போத்தனூர் காவல் உதவி ஆணையர், சம்பவ இடத்தில் இருந்தார். சடலகூறு ஆய்விற்காக வேண்டுகோள் கடிதத்தை நிர்வாகதுறை நடுவர்/RDO வழங்க சம்மந்தபட்ட மருத்துவரிடம் ஒப்படைத்தேன். சடலகூறு ஆய்விற்கு முன்பே நிர்வாகதுறை நடுவர்/RDO சடலத்தை அரசு மருத்துவமனையில் வைத்து பிரேதவிசாரணை செய்தார். நிர்வாகதுறைநடுவர் /RDO உத்தரவின் பேரில்

பிரேதத்தை எடுத்து கோவை அரசு மருத்துவமனைக்கு எடுத்து வந்து சவகிடங்கில் சவத்தை ஒப்படைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் அசா.ஆ.14. உள்ளுறுப்புகளை வேதியல் பகுப்பாய்வுக்காக எடுத்து செல்லும்படி ஒரு வேண்டுகோள் கடிதத்தை நிர்வாகதுறை நடுவர்/RDO என்னிடம் கொடுத்தார். அதை நான் தடய அறிவியல் துறையில் ஒப்படைத்தேன். அந்த கடிதம் அசா.ஆ.15. இந்த வழக்கு குறித்து என்னை உதவி ஆணையர் விசாரித்தார்.

<u>கு.வி</u>-

எத்தனை மணிக்கு ஸ்டேசனில் இருந்த போன் வந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. வேண்டுகோள் கடிதங்கள் முறையே அசா.ஆ.14, அசா.ஆ.15 யார் என்னிடம் ஒப்படைத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்னவிதத்தில் சொன்னநேரத்தில் சடலத்தை மருத்துவரிடம் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் சடலம் முன்பே அரசு மருததுவமனைக்கு போய்விட்டது என்றும் பெயரவில் என்னை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.